ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 09.05.2017 |

**நாணயக் கொள்கை மீளாய்வு: இல. 3 - 2017**

எதிர்பார்க்கப்பட்டவாறு, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (2013=100) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2017 மாச்சில் 7.3 சதவீதத்திலிருந்து 2017 ஏப்பிறலில் 6.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதுடன் கொ.நு.வி.சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கமும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 7.3 சதவீதத்திலிருந்து 2017 ஏப்பிறலில் 6.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2017 மாச்சில் உயர்வடைந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (2013=100) அடிப்படையாகக் கொண்ட பணவீக்கமும். 2017 ஏப்பிறலில் இதே போன்றதொரு வீழ்ச்சியைக் காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறுங்கால வழங்கல்பக்கத் தடைகள் மற்றும் 2016இல் இடம்பெற்ற வரித் திருத்தங்களின் தளத்தாக்கம் என்பனவற்றின் காரணமாக சில மாதாந்த தளம்பல்கள் காணப்படக்கூடிய தன்மைக்கிடையிலும் 2015இன் இறுதியிலிருந்து நாணயக் கொள்கைச் சீராக்கங்களின் உதவியுடன் பணவீக்கம் படிப்படியாகக் குறைவடைந்து 2017 இறுதியில் விரும்பத்தக்க நடு ஒற்றை இலக்க மட்டத்திற்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சந்தை வட்டி வீதங்களின் மேல் நோக்கிய சீராக்கங்களின் காரணமாக, வர்த்தக வங்கிகளினால் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2016 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 21.9 சதவீதத்திலிருந்து 2017 பெப்புருவரியில் 21.0 சதவீதத்திற்கும் 2017 மாச்சு இறுதியில் 20.4 சதவீதத்திற்கும் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. எனினும், 2017இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியிலும் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்ட போதும் விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2016 இறுதியின் 18.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017 மாச்சில் 20.0 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் காணப்பட்டமைக்கு, இம்மாத காலத்தில், உண்மை நியதிகளில் அரச மற்றும் தனியார் துறை இரண்டிற்குமான கொடுகடனில் காணப்பட்ட விரிவாக்கமே முக்கிய காரணமாகும். இது வரட்சி மற்றும் அதிகரித்த பன்னாட்டு வலு விலைகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சில அரச

கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனின் விரிவாக்கத்தினையும் உள்ளடக்கியிருந்தது. பெயரளவு மற்றும் உண்மை நியதிகள் இரண்டிலும் சந்தை வட்டி வீதங்கள் கணிசமாக உயர்வடைந்திருக்கின்றமையினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்டதொரு கடன் 2017 இறுதியளவில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டுத் துறையில் 2017இன் முதல் இரண்டு மாதங்களிலும் ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் இதே காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1.2 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1.7 பில்லியனுக்கு அதிகரித்தது. இது குறிப்பாக, வரட்சி நிலைமைகளின் விளைவாக ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் இறக்குமதி மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றில் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலித்தது. ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான உட்பாய்ச்சலில் மிதமான தன்மை காணப்பட்டபோதும், முதல் காலாண்டுப் பகுதியில் பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையம் பகுதியளவில் மூடப்பட்டிருந்தமைக்கிடையிலும் 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் சுற்றுலா வருகைகளும் அதனுடன் தொடர்பான வருவாய்களும் மேம்பட்டன. அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இரண்டும் அண்மைய மாதங்களில் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைக் கொண்டிருந்த வேளையில் அரசாங்கம் 6.2 சதவீதம் கொண்ட சாதகமான விலையில் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் பெறுமதியான அதன் 11ஆவது நாட்டிற்கான பன்னாட்டு முறியினை வெளியிட்டிருந்தது. இப்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மற்றைய எதிர்பார்க்கப்பட்ட நிதியியல் உட்பாய்ச்சல்களுடனும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான 3ஆவது தொகுதியின் பகிர்ந்தளிப்புக்களுடனும் சேர்ந்து சென்மதி நிலுவைக்கும் நாட்டின் ஒதுக்கு நிலைமைக்கும் ஆதரவளிக்கக்கூடும். 2017 ஏப்பிறல் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5.0 பில்லியன் என மதிப்பிடப்பட்ட வேளையில், இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2017 மே 05 வரையான இவ்வாண்டுப் பகுதியில் 1.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

மேற்குறிப்பிடப்பட்டவற்றினைப் பரிசீலனையில் கொண்ட நாணயச் சபை, 2017 மாச்சு 08ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில், தற்போதைய நாணயக் கொள்கைகள் பொருத்தமானவை என்ற கருத்தினைக் கொண்டிருந்தது. இதன்படி நாணயச் சபை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் எவ்வித மாற்றங்களுமின்றி முறையே 7.25 சதவீதத்திலும் 8.75 சதவீதத்திலும் பேணுவதென தீர்மானித்தது. மத்திய வங்கி, தேவையாயின் மேலும் வழிமுறைகளைப் பின்பற்றும் பொருட்டு இனிவரும் காலத்தில் பேரண்ட பொருளாதார அபிவிருத்தியினை நெருங்கிக் கண்காணிக்கும்.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றமின்றியுள்ளன** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75% |

| | |
|---|---|
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |